04.02.2026

O.S.No.142/2022

DW1- குமாரசாமி – த/பெ. முத்துச்சாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. வாதி முருகன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் தம்பி ஆவார்.

2. எனக்கு எழுத படிக்கத் தெரியுமா என்றால் தெரியும்.

3. தபசில் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என் தாத்தாவிற்கு பாத்தியம்.

4. என் தாத்தாவிற்கு தபசில் சொத்தைத் தவிர வேறு சொத்து எங்கு உள்ளது என்றால் வழக்கு சொத்தைத் தவிர வேறு சொத்து கிடையாது.

5. 1993ம் வருடம் வா.சா.ஆ.1ன் மூலம் ஏற்படுத்தப்பட்ட பாக பத்திரத்தில் யார் யார் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சின்னசாமி, குமாரசாமி, முருகன், வெங்கடாசலம், ராதாகிருஷ்ணன் மற்றும் சங்கர் ஆகியோர்களுக்கிடையே பாகம் பிரிக்கப்பட்டது.

6. வழக்கு சொத்தை தான் 6 பேரும் சேர்ந்து பாகம் பிரித்துக்கொண்டர்கள் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.1 பாகத்தின் படி எனக்கு எந்த சொத்தும், முருகனுக்கும் எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் மேல்பாதி முருகனுக்கும், கீழ்பாதி எனக்கும் ஒதுக்கப்பட்டது.

8. மேல்பாதி முருகனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் கடை உள்ளது என்றால் சரிதான். அந்த கடைக்கு தனி சர்வே எண் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் கீழ்பாதியில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் கடை உள்ளது என்றால் சரிதான். அந்த கடைக்கு தனி சர்வே எண் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. தென்பாதியில் வெங்கடாசலத்திற்கு வீடு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. மேல்பாதியில் முருகனுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர் கட்டியுள்ள வீட்டிற்கு கழிவு நீர், குடிநீர் மற்றும் மின் இணைப்பு எங்கிருந்து வருகிறது என்றால் பொதுவான இடத்தில் பூமிக்கு அடியில் இருந்து வருகிறது.

11. என்னுடைய வீட்டிற்கு கீழ்பக்கம் ஒரு முடுக்கு உள்ளது என்றும் அந்த முடுக்கின் வழியாகத் தான் முருகன் வீட்டிற்கு கழிவு நீர், குடிநீர் மற்றும் மின் இணைப்பு வரும் என்றால் சரிதான்.

12. அந்த முடுக்கிற்கு இடையே ஒரு பாதை உள்ளது என்றால் இல்லை.

13. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார் என்றால் சரிதான்.

14. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கை மற்றும் வரைபடத்தில் முருகன் வீட்டிற்கும், கழிவுநீர் செல்லும் இடத்திற்கும் இடையே தென்வடல் ரோட்டிலிருந்து 4 அடி பாதை செல்வதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

15. என் வீட்டின் கிழமேல் மற்றும் தென்வடல் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்குத் தெரியாது.

16. என் வீட்டின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. தற்போது நான் வீடு கட்டி வருகிறேனா என்றால் இல்லை.

17. என் வீட்டிற்கு வடபக்கத்தில் உள்ள கடையிலிருந்து என் வீட்டிற்கு வருவதற்கு ஒரு பாதை உள்ளது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் கடையை வாடகைக்கு விடுவதற்காக அந்த பாதையை அடைத்துள்ளேன் என்றால் சரிதான்.

18. முருகன் அவர் சொந்தமாக கடை நடத்துவதால் அவர் பாதை விட்டுள்ளார் என்றால் சரிதான்.

19. வா.சா.ஆ.1 சொத்தில் முத்துசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை முத்துசாமி காலத்திற்கு பின் நானும், முருகனும் பிரித்துக்கொள்ள

வேண்டும் என சங்கதி காணப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20. என் தகப்பனார் இருக்கும் போது மேல்பாதி, கீழ் பாதி என இரண்டிலும் ஒரே வீடு இருந்தது என்றால் சரிதான் பின்னிட்டு நாங்கள் வீட்டை பிரித்துக்கொண்டோம்.

21. எப்போது வீட்டைப் பிரித்துக் கொண்டோம் என்றால் சரியாக நியாபகம் இல்லை.

22. வீடு பிரிப்பதற்கு முன்பு ஒரே வீட்டின் தலைவாசல் எந்த திசையை நோக்கி இருந்தது என்றால் தெற்கு திசை நோக்கி இருந்தது. அந்த தலைவாசலை ஒட்டி தெற்குபக்கம் வெங்கடாசலம் வீட்டின் சுவர் உள்ளது என்றால் சரிதான். எனவே வெளியே வருவதற்கு வழியில்லை என்றும் எவ்வாறு நாங்கள் வெளியே வருவோம் என்றால் கடை வழியாக வெளியே வருவோம். எனவே கடை வழியாக மட்டுமே வெளியே வருவோம் என்றும் தலைவாசல் வழியாக வெளியே வரமாட்டோம் என்றால் சரிதான்.

23. வெங்கடாசலம் வீட்டில் இருந்து பிரதிவாதி வீட்டிற்கு வருவதற்கு ஒரு வாசல் உள்ளது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும வடக்கு பக்கம் ஒரு வாசல் உள்ளது என்றும் அதை புகைப்படம் மூலமும், நீதிமன்ற ஆணையர் மூலமும் நிரூபிக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. தற்போது சாட்சி வாசல் உள்ளது என்றும் அது பொதுச்சுவற்றில் உள்ளது என்றும் சாட்சியம் அளிக்கிறார்.

24. பொதுச்சுவருக்கு வடபக்கம் எத்தனை அடி காலி மனை உள்ளது என்றால் 4 அடி காலி மனை நான் செல்வதற்காக விட்டுள்ளேன்.

25. நடைபாதைக்கு கிழக்கே தெருவரை செல்ல ஒரு வழி உள்ளது என்றால் சரிதான். அந்த வழியாகத் தான் நானும், முருகனும் வீட்டிற்கு வரவேண்டும் என்றால் இல்லை.

26. 1992 பாக பத்திரத்தில் முருகனுக்கு அந்த பாதை வருவதற்கு உரிமை இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

27. வா.சா.ஆ.1 பாக பத்திரத்தில் தென்வடல் நடைபாதை என குறிப்பிடாததால் நான் தற்போது வம்படியாக வாதிக்கு பாதை உரிமையை தர மறுக்கிறேன் என்றும் வாதிக்கு 3ம் தபசில் சொத்து பாதை தவிர வேறு பாதை இல்லாததால் அவருக்கு பாதை உரிமை தரவேண்டியது சட்ட கடமை என்றும் எனவே வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

28. பாதையிலுள்ள ஆழ்துளை கிணற்றில் இருவரும் பொதுவாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல என்னிடம் அனுமதி கேட்டதால் நான் அவர் அனுபவம் செய்ய அனுமதி கொடுத்தேன். அந்த ஆழ்துளை கிணறானது என் தகப்பனார் முத்துசாமியால் போடப்பட்டது என்றால் சரியல்ல என்னால் போடப்பட்டது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

29. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் ஆழ்துளை கிணறு மற்றும் மோட்டாருக்கு நானும் பிரதிவாதியும் சேர்ந்து செலவு செய்தோம் என்றும் எனவே அதில் வாதிக்கு சமபங்கு உள்ளது என்றால் சரியல்ல.

30. 2003ம் வருடம் நான் பாதையை வழிமறித்தது காரணமாக வாதி என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

31. வாதி என் மீது புகார் கொடுத்த பின் நான் 20 வருடம் பாதையை மறுக்காமல் இருந்துவிட்டு தற்போது புதிய வீடு கட்டிய பின் மீண்டும் பாதையை மறிப்பதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே வாதிக்கு பாதை உரிமை உள்ளது என்பதால் வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

32. நான் சொல்வது போல் வாதிக்கு கடையில் பாதை இல்லை என்றும் எனவே 3ம் தபசில் சொத்தில் வாதிக்கு பாதை உள்ளது என்பதால் வாதியின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி